DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No.13/2021**

**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | |
|---|---|---|---|
| Name | : **முத்துகுமார்** | Caste | : |
| Father Name | : **சின்னப்பன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **07.08.2026.**

**PW - 25**

**( 1** முதல் **3** எதிரிகள் ஆஜர்**)**

**சாட்சி காணொலி காட்சி மூலம் முன்னிலையானார்**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்சமயம் கரூர் மாவட்டம், தனிப்பிரிவு குற்ற புலனாய்வு துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.01.2020 அன்று நான் லால்குடி காவல் வட்ட ஆய்வாளராக பணியில் இருந்தேன். மேற்படி தேதியில் லால்குடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த தங்கவேல் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது குணசேகரன் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று அவர் நிலைய குற்ற எண்.22/2020 இதச 302 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை நகலை எனது விசாரணைக்கு வைத்தார். நான் அன்றைய தினம் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கில் இறந்துபோன பெரியசாமியின் பிரேதம் கண்டுப்பிடிக்கப்பட்ட இடமான புள்ளம்பாடி புதுப்பாலம் சென்று அந்த இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் வீரமணி, ராகுல் ஆகியோர் முன்னிலையில்

பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்தேன். அந்த மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.16** ஆகும். பின்னர், சம்பவ இடத்திலிருந்து இரத்தம் படிந்த மண் சிறிதளவு, இரத்தம் படியாத மண் சிறிதளவு ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்பு மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.17** ஆகும். மேற்படி தடயங்கள் **அ.த.சா.பொ.2** மற்றும் **அ.த.சா.பொ.3** ஆகும். பின்னர், சாட்சிகள் குணசேகரன், ராஜ்கிரண், வேல்முருகன், கோபிநாத், ராஜலிங்கம், சூர்யா, செல்வகுமார், வீரமணி மற்றும் ராகுல் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்னர், புறப்பட்டு வழக்கில் இறந்துபோன பெரியசாமி குளிக்க சென்ற இடமான பெருவளநல்லூர், புள்ளம்பாடி வாய்க்கால் சென்று மேற்படி இடத்தை சாட்சிகள் மதியழகன், ஈஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்தேன். அந்த மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.18** ஆகும். பின்பு, வழக்கில் இறந்துபோன பெரியசாமியின் பிரேதத்தை லால்குடி அரசு மருத்துவமனைக்கு காவலர் சிவா என்பவர் மூலம் அனுப்பிவைத்தேன். பின்னர், லால்குடி அரசு மருத்துவமனை சென்று பிணவறையில் வைக்கப்பட்டிருந்த பெரியசாமியின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு அறிக்கை தயாரித்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.த.சா.ஆ.19** ஆகும். மறுநாள் 20.01.2020 அன்று அவரது இறப்பின் உண்மை காரணம் அறியும் பொருட்டு பிரேத பரிசோதனை செய்ய காவலர் சிவா என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தனுப்பினேன். பின்னர், சாட்சி காசியம்மாள், முருகன், சோலைமுத்து, இளம்பரிதி, ராகுல், ஆகாஷ், தண்டாயுதபாணி, மணிகண்டன், அஜித்குமார், சந்திரசேகர் மற்றும் கண்டசெல்வம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்னர், 14.02.2020 அன்று பணியிட மாறுதலின் காரணமாக நான் நவல்பட்டு காவல் நிலையத்திற்கு சென்றுவிட்டேன். வழக்கு கோப்பை பொறுப்பு ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

பெரியசாமி குளிக்க சென்ற இடத்தில் உள்ள படித்துறையை பார்வையிட்டு வரைபடம் மற்றும் மகசர் தயாரித்தேன். அந்த படித்துறையில் பெரியசாமிக்கு என்ன நடந்தது என்பதற்கான தடயம் எதுவும் எனது விசாரணையில் கிடைக்கவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் பெரியசாமி குளிக்க போனதாக சொல்லும் நேரத்தில் அந்த படித்துறையில் வேறு யாரும் இருந்ததாக குறிப்பிட்டு சொன்னார்களா என்றால் இல்லை. எனது விசாரணையில் பெரியசாமியின் உடல் ஆற்று நீரில் மிதந்து வந்தபோது அந்த உடலின் கழுத்தில் துண்டு ஒன்று இருந்ததாக சொன்னார்கள் என்றால் சரிதான். அ.சா.1 முதல் உடலை பார்த்த சாட்சிகள் பெரியசாமியின் உடலில் வலது பக்க முதுகுகிலும், இடது முன்கையிலும் வெட்டுக்காயங்கள் இருந்ததாக கூறினார்களா என்றால் அவ்வாறு கூறியுள்ளார்கள். மருத்துவரை நான் விசாரிக்கவில்லை.

**மறுவிசாரணை இல்லை.**

*(இந்த சாட்சி காணொலி விசாரணை மூலம் முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர் (Principal District Court, Karur ல் உள்ள System Analyst மனோகரன் அவர்கள் முன்னிலையில் ஆஜராகி மேற்படி சாட்சி காணொலி வாயிலாக இருதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் சொன்னதை என்னால் இந்நீதிமன்ற தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் கணினியில் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு, அந்த திரை (Screen) காணொலி மூலம் சாட்சியும், மற்ற இணைப்பில் உள்ளவர்களுக்கும் உடனுக்குடன் பகரப்பட்டு, பின்னிட்டு சாட்சியின் முழு சாட்சியம் மின்னஞ்சல் வாயிலாக Co–ordinater திரு.ச.முரளி பிரசாத் தட்டச்சர் மூலம் சாட்சிக்கு அனுப்பப்பட்டு, அங்கு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு, கரூரில் இன்று 0708.2026 அன்று கையொப்பமிடப்பட்டது.)*